# இந்துசமயஅறநிலையத்துறை

## அருள்மிகு போர்மன்னலிங்கேஸ்வரர் திருக்கோயில்,

மங்கலம், கீழ்பென்னாத்தூர்வட்டம்,திருவண்ணாமலை மாவட்டம்.

-----

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

**ஒப்பந்தநாள்** ; 13.04.2022**பிற்பகல்**03.00**மணி**

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், மங்கலம்,அருள்மிகு போர்மன்னலிங்கேஸ்வரர் திருக்கோயிலில்கீழ்க்காணும் விபரப்படியான திருப்பணிகளுக்கு தமிழ்நாடு அரசு இந்து சமயஅறநிலையத்துறையில் பதிவுபெற்ற, முன் அனுபவம் வாய்ந்த மரஸ்தபதிகள்/மரசிற்பிகளிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்டஒப்பந்த புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. ஸ்தபதிகள் பதிவுச்சான்றும், அப்பதிவானது நடைமுறையில் உள்ளதற்கான சான்றும் (LIVE CERTIFICATE), GST வரிச்சான்றும், கடந்த மாதம் GST கட்டியதற்கான சான்றும், வருமான வரி சான்றும், முன் அனுபவச் சான்றும், மற்றும் முன்வைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலை அல்லது திருக்கோயில் இரசீது மற்றும் ஒப்பந்தபுள்ளி படிவம் ஆகியவைகளையும் வைத்து மூடி முத்திரையிட்டு 13.04.2022 பிற்பகல் 12.30 மணிவரை இந்து சமய அறநிலையத் துறை, திருவூடல்தெரு, திருவண்ணாமலைஆய்வர் அலுவலகத்தில்அதற்கென வைக்கப்பட்டுள்ள ஒப்பந்தபுள்ளி பெட்டியில் சேர்ப்பிக்க வேண்டும்.

ஒப்பந்த புள்ளி படிவங்கள் 12.04.2022 வரை உள்ள அலுவலக வேலை நாட்களில் உரிய அலுவலரால் மேலொப்பம் செய்யப்பெற்ற ஸ்தபதிகள் பதிவுச் சான்றும், அப்பதிவானது நடைமுறையில் உள்ளதற்கான சான்றும் (LIVE CERTIFICATE), GST வரிச்சான்றும், கடந்த மாதம் GST கட்டியதற்கான சான்றும், வருமான வரி சான்றும் இணைத்து டெண்டர் படிவத் தொகை மற்றும் முன்வைப்புத் தொகை செலுத்தி இந்து சமய அறநிலையத் துறை, திருவூடல்தெரு, திருவண்ணாமலைஆய்வர் அலுவலகத்தில்பெற்றுக்கொள்ளலாம். அல்லது www.tenders.tn.gov.in வலைத்தளங்களிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகளை 13.04.2022பிற்பகல் 03.00 மணிக்கு ஆஜராகி இருக்கும் ஸ்தபதிகள் மற்றும் இலாக்கா அலுவலர்கள் முன்னிலையில் திறந்து பதிவு செய்யப்படும்.

### வேலைவிபரங்கள்

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. | முன் வைப்புத் தொகை ரூ. | டெண்டர் படிவம் (GST வரி 18%உட்பட) ரூ. | முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்ததாரர் தகுதி |
|---|---|---|---|---|---|---|
| 1. | புதிய திருத்தேர் செய்யும் பணி | 29,90,366/- | 25,000/- | 9,000+1,620 | 9 மாதம் | தமிழ்நாடு அரசு இந்து சமயஅறநிலையத்துறையில் பதிவுபெற்ற, மரஸ்தபதிகள்/மரசிற்பிகள் |

## நிபந்தனைகள்

1)ஒப்பந்தத்தில் கலந்துகொள்பவர்கள் வேலைக்கான முன் வைப்புத்தொகையினை இந்து சமய அறநிலையத் துறை, திருவூடல்தெரு, திருவண்ணாமலைஆய்வர் அலுவலகத்தில்செலுத்திய பின் தான் டெண்டர் படிவம் கொடுக்கப்படும்.

2)ஒப்பந்தத்தில் கலந்துகொள்பவர்கள், இப்பணியில் நன்கு அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும்.

3)ஒப்பந்தத்தில் கலந்துகொள்பவர்கள் ஒப்பந்தபுள்ளி படிவத்தில் வேலை விபரத்தை கவனித்தும், ஸ்தலத்தினை நன்கு நேரில் பார்த்தும், இந்து சமய அறநிலையத் துறை, திருவூடல்தெரு, திருவண்ணாமலைஆய்வர் அலுவலகத்தில்மதிப்பீடு மற்றும் வரைபடத்தினை பார்த்தும், டெண்டர் நிபந்தனைகளை கேட்டுப்பெற்றுக்கொண்டும் ஒப்பந்தபுள்ளி போடுவதாகவே கருதப்படும்.

4)வேலைக்கான ஒப்பந்தபுள்ளியில் விலை விபரத்தினை இனம் வாரியாக எண்ணாலும் எழுத்தாலும் தனித்தனியே அடித்தல் திருத்தல் இன்றி குறிப்பிடவேண்டும். அவ்வாறு அடித்தல் திருத்தல் இருப்பின் சுருக்கொப்பம் இடப்படவேண்டும். குறைந்த தொகை குறிப்பிட்டுள்ள டெண்டரையே ஏற்றுக்கொள்ளப்படும். திருக்கோயில் நன்மையைக் கருதி, எந்த ஒரு டெண்டரையும் காரணம் கூறாமல் நிராகரிக்க அல்லது அங்கீகரிக்க இலாக்கா அலுவலருக்கு அதிகாரமுண்டு.

5)ஒப்பந்ததாரர் தளவாட சாமான்களை தமது பொறுப்பிலேயே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

6)ஒப்பந்ததாரர் மதிப்பீடு பிளான்படியும், தமிழ்நாடு பில்டிங் பிராக்டிஸ் குறியீடுகளின்படியும்தான் வேலை செய்ய வேண்டும். அவ்விதம் செய்யத்தவறினால் அதனால் ஏற்படும் சகல நஷ்டங்களையும் ஒப்பந்ததாரர் ஈடு செய்து கொடுக்கவேண்டும். செய்யப்பட்ட வேலையினையும் அப்புறப்படுத்தப்படும்.

7)அங்கீகரிக்கப்பட்ட டெண்டர்தாரர் வேலைக்கான உத்திரவு வழங்கப்பட்ட ஒரு வாரகாலத்திற்குள் தனது செலவில் ஒப்பந்தபத்திரம் எழுதி கொடுத்து, கூடுதல் வைப்புத்தொகையினை செலுத்தியும் குறித்த காலத்தில் வேலையை முடிக்கவேண்டும். ஒப்பந்த காலத்திற்குள் பணியை முடிக்கத் தவறினாலோ (அ) தாமதமாக செய்தாலும் ஒப்பந்தப்படி அபராதம் விதிக்கப்படும்.

8)ஒப்பந்த படிவம் கோரி விண்ணப்பிக்கும்போதே அவ்வேலைக்கான முன்வைப்பு தொகையையும் செலுத்த வேண்டும். டெண்டர் கிடைக்காத டெண்டர்தாரர்களின் முன்வைப்புத் தொகை டெண்டர் அங்கீகரிக்கப்பட்டபின் வழங்கப்படும்.

9)செய்யப்பட்ட வேலைக்கு அவ்வப்போது இலாக்கா பொறியியல் துறையினர் அளவீடு செய்து சான்று செய்யப்படும் தொகையினையே வழங்கப்படும். அதன்படி வழங்கப்படும் தொகையில் GST2%, வருமானவரி 1%, மற்றும் காப்பீடு தொகை 5% வருங்கால பிடித்தத்திற்கோ அல்லது அதிகமாக பணம் பெற்றிருந்தால் ஈடுசெய்வதற்கோ இறுதிப்பட்டியல் அங்கீகரிக்கப்படும் வரை வைத்து, பின்னரே திரும்ப அளிக்கப்படும்.

10)ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும்.

11)வேலையின் போது தொழிலாளருக்கோ அல்லது பொருட்களுக்கோ நஷ்டம் ஏற்பட்டால் அதற்கு ஒப்பந்ததாரரே முழு பொறுப்பு ஏற்கவேண்டும். இன்சூரன்ஸ் செய்து கொள்ள வேண்டும்.

12)கட்டுமானபணி வேலையின்போது இந்து சமய அறநிலையத்துறை பொறியாளர்கள் மற்றும் ஆலோசனைக் குழுவின் ஆலோசனைபடியும் மற்றும் மேற்பார்வைக்கு உட்பட்டும் பணி செய்ய வேண்டும்.

13)இதர பிற நிபந்தனைகளை இந்து சமய அறநிலையத் துறை, திருவூடல்தெரு, திருவண்ணாமலைஆய்வர் அலுவலகத்தில்அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

திருமதிஉ.சத்தியா
தக்கார்/ஆய்வர்

நாள் : 27.03.2022
இடம் ;மங்கலம்